
இயல் ஒன்பது

மனிதம்,
ஆளுமை

# அன்பின் மொழி




## கற்றல் நோக்கங்கள்

- மாற்றுச்சிந்தனைகள் சமூகத்தில் ஒருவரைத் தனித்து அடையாளம் காட்டுவதை உணர்ந்து, அதுபோன்று சிந்திக்கும் ஆற்றலை வளர்த்துக் கொள்ளுதல்.
- மனித மாண்புகளையும் விழுமியங்களையும் வெளிப்படுத்தும் வாயில்களான இலக்கியங்களின் உட்பொருளை அறிய முற்படுதல் .
- நேர்த்தியும் செப்பமும் கொண்ட கதைகளை ஆர்வத்துடன் படிக்கவும் எழுதவும் பழகுதல்.
- ஓர் ஆளுமையை மையமிட்ட கருத்துக்களைத் தொகுத்து முறைப்படுத்திச் சீர்மையுடன் இதழ் வடிவில் வெளிப்படுத்தும் திறன் பெறுதல்.
- அணியிலக்கணக் கூறுகளைச் செய்யுளுடன் தொடர்புபடுத்தி அதன் சுவையுணர்ந்து நயத்தல்.

உரைநடை உலகம்

# ஜெயகாந்தம்

*– நினைவு இதழ்*

கருத்தாழமும் வாசகச் சுவைப்பும் கலந்து இலக்கியங்கள் படைத்தவர் ஜெயகாந்தன். சமகாலக் கருத்துகளையும் நிகழ்வுகளையும் சமகால மொழியில் சமகால உணர்வில் தந்தவர் அவர்; சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என எதைத் தொட்டாலும் தனிமுத்திரை பதித்தவர்; இலக்கியத்திற்கான பெரும் விருதுகளை வென்றவர். மனிதம் தோய்ந்த எழுத்தாளுமை மிக்கவர் ஜெயகாந்தன். அவரது காந்தத் தன்மையுடைய எழுத்தை நினைவூட்டும் வகையில் அவரது படைப்புப் புதையலிலிருந்து சில மணிகளைத் தொடுத்து ஜெயகாந்தம் என்னும் நினைவு இதழ் உருவாக்கப்பட்டுள்ளது.

உள்ளே...


- எதற்காக எழுதுகிறேன்? – ஜெயகாந்தன்
- இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்
- ஈன்ற முத்துகளில் சில (எழுதிய நூல்கள்)
- திரைப்படமான படைப்புகள்
- முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்
- இன்னுமொரு முகம் (கவிதை)
- தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும் (கேள்வி பதில்)
- தர்க்கத்திற்கு அப்பால் – கதை




24.04.1934 – 08.04.2015



### விருதுகள்

- குடியரசுத் தலைவர் விருது (உன்னைப்போல் ஒருவன்– திரைப்படம்)
- சாகித்திய அகாதெமி விருது – சில நேரங்களில் சில மனிதர்கள் (புதினம்)
- சோவியத் நாட்டு விருது (இமயத்துக்கு அப்பால்)
- ஞானபீட விருது
- தாமரைத்திரு விருது



10th_Tamil_Unit 9.indd 204 12/08/2021 7:10:46 PM

www.tntextbooks.in



## எதற்காக எழுதுகிறேன்? – ஜெயகாந்தன்

சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டியவர். நேர்முக எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர். தன்னையறிதல் என்பதிலும் தன்னை உணர்த்துதல் என்பதிலும் முனைப்பாக இருந்தவர். அவர்தான் ஜெயகாந்தன்

*நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு, என் எழுத்துக்கு ஒரு இலட்சியமும் உண்டு. நான் எழுதுவது, முழுக்க முழுக்க வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும் எனது தனிமுயற்சியின் பயனுமாகும்.*

*இந்த நாட்டில், வியாசன் முதல் பாரதி வரை எதற்காக எழுதினார்கள்? இவர்களில் யாராவது கலையைத் தாங்கிப் பிடிக்க என்று சொல்லிக்கொண்டதுண்டா? இவர்களைவிட கலையைத் தாங்கியவர்களும், காலம் காலமாய் வாழும், வாழப்போகும் கலா சிருஷ்டிகளைத் தந்தவர்களும் உண்டா?*

*தர்மார்த்தங்களை உபதேசிக்கவே வியாஸர் பாரதத்தை எழுதினார்.*

*தமிழ் இலக்கணமே நூலினியல்பாவது என்னவென்று சொல்லும் போது,*

*'நூலினியல்பே நுவலின் ஓரிரு*

*பாயிரந்தோற்றி மும்மை யினொன்றாய்*

*நாற்பொருட் பயத்தலொடு எழுமதந் தழுவி'*

*என்று நூலின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு பயனுக்காக இருத்தல் வேண்டும் என்று சொல்லி அதன் பின்னர்தான் விளக்கங்களைக் கூறிச் செல்கிறது.*

*கலைத்தன்மைக்கு எந்தவிதக் குறைவும் வராமல், கலாதேவியின் காதற் கணவனாகவும் சமுதாயத் தாயின் அன்புப் புதல்வனாகவும் இருந்துதான் நான் எழுதுகிறேன்.*

*அர்த்தமே வடிவத்தை வளமாக்குகிறது அல்லவா? வெறும் வடிவம் மரப்பாச்சிதான். ஆகையினால் இவற்றைப் பிரித்துக்கொண்டு அவஸ்தைக்கு உள்ளாகின்றார். நமது அறியாமையால் அவஸ்தைகளுக்குள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன். கலைப்பணி என்றாலே அதனுள் சமூகப் பார்வை அடக்கம். பிரித்துப் பேசும் போக்கு வந்துவிட்டதால் பிரித்துச் சொல்கிறேன். அது சேர்ந்துதான் இருக்கிறது.*

*'எதற்காக எழுதுகிறேன்?' என்று நான் சொன்ன காரணங்களுக்குப் புறம்பாக நடந்தால் நான் கண்டிக்கப்படவும், திருத்தப்படவும் உட்பட்டிருக்கிறேன்.*



10th_Tamil_Unit 9.indd 205 12/08/2021 7:10:47 PM

## இவர்கள் பார்வையில் ஜெயகாந்தன்

பள்ளிக்கல்வி அளவே படித்திருந்த ஜெயகாந்தன் தமிழிலக்கிய உலகில் மிகப் பெரிய ஆளுமையாகத் திகழ்கிறார். எல்லாத்தரப்பு மொழிகளையும் ஆண்ட வல்லமை அவருக்கிருந்தது.

❖ "ஜெயகாந்தன், எத்தகைய பாத்திரங்களைப் படைத்தாலும் அந்தப் பாத்திரங்களின் சிறந்த அம்சங்களைக் குறிப்பிடத் தவறுவதில்லை. துவேஷத்தைப் பரப்புவது, அவருடைய இயல்புக்கு சற்றும் ஒவ்வாதது. அவர் அரசியலில் தொடர்ந்து பங்கு பெறாமல் போனதற்கு இதுகூட காரணமாக இருந்திருக்கலாம்."
– *அசோகமித்திரன்*

❖ கச்சிதமான உருவம், கனமான உள்ளடக்கம், வலுவான நடை, புதுக்கருத்துகள், புதுவிளக்கங்கள், ஆழம், கனம் இந்த அம்சங்களை இவருடைய சிறுகதைகளில் பூரணமாகக் காணலாம். அதுமட்டுமின்றிப் பலதிறப்பட்ட சூழ்நிலைகளையும் வெற்றிகரமாகச் சித்தரிப்பது இவருடைய அரிய சாதனை.
– *வாசகர்களின் கருத்து – தீபம் இதழ் – 1967.*

❖ நேர் கொண்ட ஆனால் வித்தியாசமான பார்வை. நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள், திமிர்ந்த ஞானச் செருக்கு, கம்பீரமான குரல், வளமான, புதுமையான வாழ்க்கைச் சித்தரிப்புகள் – இவைகள்தாம் ஜெயகாந்தன் என்ற செம்மாந்த தமிழனின் சிறப்பான அடையாளங்கள். 'படிக்காத மேதை' என்று குறிப்பிடப்படும் அவர், முறையாகக் கல்லூரிகளில் படிக்கவில்லையே தவிர, தமிழ், இந்திய இலக்கியங்களை மட்டுமன்றி, சோவியத் பிரெஞ்சு இலக்கியங்களைத் தானே படித்து உணர்ந்தது மட்டுமன்றி, வாழ்க்கையையும் ஆழமாகப் படித்தவர் பிறகு அவற்றை வார்த்தைகளில் அழகுறப் படைத்தவர்.

♦ ♦ ♦ ♦ ♦ ♦

– *கா.செல்லப்பன்*

## ஈன்ற முத்துகளில் சில (எழுதிய நூல்கள்)


| சிறுகதைத் தொகுப்பு | குறும்புதினங்கள் | புதினங்கள் |
|---|---|---|
| ❖ குருபீடம் | ❖ பிரளயம் | ❖ பாரீசுக்குப் போ! |
| ❖ யுகசந்தி | ❖ கைவிலங்கு | ❖ சுந்தர காண்டம் |
| ❖ ஒரு பிடி சோறு | ❖ ரிஷிமூலம் | ❖ உன்னைப் போல் ஒருவன் |
| ❖ உண்மை சுடும் | ❖ பிரம்ம உபதேசம் | ❖ கங்கை எங்கே போகிறாள் |
| ❖ இனிப்பும் கரிப்பும் | ❖ யாருக்காக அழுதான்? | ❖ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் |
| ❖ தேவன் வருவாரா | ❖ கருணையினால் அல்ல | ❖ இன்னும் ஒரு பெண்ணின் கதை |
| ❖ புதிய வார்ப்புகள் | ❖ சினிமாவுக்குப் போன சித்தாளு | ❖ ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம் |

**மொழி பெயர்ப்புகள்**

❖ வாழ்விக்க வந்த காந்தி (பிரெஞ்சு மொழியில் வந்த காந்தி வாழ்க்கை வரலாற்றின் தமிழாக்கம் )
❖ ஒரு கதாசிரியனின் கதை (முன்சி பிரேம்சந்தின் வாழ்க்கை வரலாறு)

♦ ♦ ♦ ♦ ♦ ♦

## திரைப்படமான படைப்புகள்



## முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன்

எழுத்தாளர், ஒருவருடைய படைப்பு நோக்கத்தையும் படைப்பு பாங்கையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை. தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்குத் தரும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.

### பாரீசுக்குப்போ ... புதினத்தின் முன்னுரை




*"ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்... ஓர் எழுத்தாளன் ஆத்ம சுத்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக்கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" (1966)*

♦ ♦ ♦ ♦ ♦ ♦

## இன்னுமொரு முகம் (கவிதை)

ஜெயகாந்தன் சில கவிதைகளையும் திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அது. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பற்றிய அவரின் கவிதை இது

"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் – ஏழை
கண்ணீரும் பாடலிலே கலந்திருக்கும்
பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் – பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்து வரும்"



♦ ♦ ♦ ♦ ♦ ♦



## தொடுத்த கேள்விகளும் கொடுத்த பதில்களும்

உடனுக்குடன் அறிவார்ந்த எதிர்வினையாக ஜெயகாந்தன் அளிக்கும் பதில்களுக்கு முன்னால், கேள்விக்கணைகள் மழுங்கிவிடும்.

சிறுகதைகளைப் படைப்பதில் தங்களுடைய தனித்தன்மை வாய்ந்த திறமையை வாசகர்கள் கொண்டாடுகிறார்களே, இத்துறையில் தாங்கள் கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை?
(பேட்டி – திரு. கிருஷ்ணமணி, 1966)

நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சினைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சினைகளே.

உங்கள் பார்வையில் சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை எது? மிகப் பெரிய சவால் எது?
மகத்தான சாதனை – பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தது. மிகப் பெரிய சவாலும் அதுவே.

இந்த வயதில், தேசம் செல்லும் பாதை, எழுத்துலகத்தின் போக்கு இவற்றை எல்லாம் பார்க்கும்போது எப்படி இருக்கிறது?
காலந்தோறும் மாற்றங்களை நாம் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்.

## சிறுகதை

மனிதம் என்பது பரந்து விரிந்த வானம் போன்று எல்லைகளற்றது. இதை நம்மால் மேற்கொள்ள முடியாதென்று ஒதுங்கிவிடக்கூடாது. ஆறுதலளிக்கும் ஒரு புன்னகை, ஒரு தோள்தட்டல், இரண்டொரு அன்புச்சொற்கள், தன்னால் இயன்ற சிறு உதவி இவையெல்லாம் மனிதம்தான். மனிதத்தின் துளியளவு வெளிப்பாடு ஏதோ ஒரு வகையில் நமக்கு உதவக்கூடும்.




வெற்றி என்ற வார்த்தைக்குப் பொருளில்லை. நினைத்தது நடந்தால் வெற்றி என்று நினைத்துக் கொள்கிறோம். தோல்வி நிச்சயம் என்று எண்ணித் தோற்றால், அந்தத் தோல்வியே வெற்றிதான். ஒருகாலத்தில் எனக்கு இப்படிப்பட்ட 'வெற்றிகள், வாழ்க்கையில் நிறையவே சம்பவித்தன.

என் வாழ்க்கையையே நிர்ணயிக்கும் ஒரு முக்கிய காரியமாய்ப் பக்கத்து நகரத்துக்குப் போயிருந்தேன். வழக்கம்போல, 'தோல்வி நிச்சயம்' என்ற மனப்பான்மையுடன் போன நான், வழக்கத்திற்கு மாறாக அன்று தோற்றுப்போனேன். தோல்வி நிச்சயம் என்ற என் மனப்போக்கு தோற்றது. என் வாழ்க்கையே நிர்ணயிக்கப்பட்டுவிட்டது.

இந்தத் தோல்வியை, அல்லது வெற்றியைக் கொண்டாடித் தீரவேண்டும். ஊருக்குத் திரும்பிய பின்தானே? அல்ல; இப்போதே! நான் ரொம்ப அவசரக்காரன்.

கொண்டாடுவது என்பது பெரிய காரியமா? அது கொள்ளப்பட்ட உள்ளம் தன்னுள் லயித்துக் குதூகலிப்பது. அதன் விளைவாய் ஏற்படும் புற நிகழ்ச்சிகள் பெரிய காரியமன்று. கொண்டாடத்தக்கதைச் சிலர் வானத்தை வண்ணப்படுத்தும் வேடிக்கை நிகழ்த்திக் கொண்டாடுவார்கள். சிலர் நாலுபேருக்கு வயிறார உணவளித்துக் கொண்டாடுவார்கள். இன்னும் சிலர் அந்தப் பொழுதிலாவது தன் வயிறாரத் தான் உண்டு மகிழ்வார்கள். அதெல்லாம் அப்பொழுதிருக்கும் அவரவர் சக்தியைப் பொறுத்தது. எனினும், மனசில் ஏற்படும் அனுபவம் அனைவர்க்கும் ஒன்றுதான்.

இப்பொழுது என் நிலைமை... பையிலிருக்கும் ஒரு வெள்ளி ரூபாய் நாணயம்தான். அதற்கென்ன? இந்த ஒரு ரூபாயிலும் கொண்டாடலாமே! அதுதான் முடியாது. ஊருக்குப் போக முக்கால் ரூபாய் வேண்டும். அதனால்தான் என்ன? கால் ரூபாயில் கொண்டாட முடியாதோ? நிச்சயம் முடியும்.

சங்கரய்யர் ஹோட்டலில் புதுப்பால், புது டிகாக்ஷன், சர்க்கரை கம்மி, ஸ்ட்ராங்கா ஒரு கப் காபி இரண்டணாதான். காபி அருந்தியதும் உடம்பில் ஒரு தெம்பும், மனசில் ஒரு தனிக் குதூகலமும் பிறந்தன. ஊர்திரும்ப ஒதுக்கிவைத்த பன்னிரண்டணா போக, கையில் இருக்கும் இரண்டணாவை என்ன செய்யலாம்? 'கடைசிச் சல்லியையும் ஒரு ராஜாவைப் போல் செலவுசெய்' என்ற பழமொழி நினைவுக்கு வந்தது.

"ஐயா தருமதுரை... கண்ணில்லாத பிச்சைக்காரன் ஐயா..!" என்ற குரல். ஸ்டேஷனுக்குள் நுழையும் இடத்தில். ஒரு ஓரமாய் அந்தப் பார்வையற்ற பிச்சைக்காரன் உட்கார்ந்திருந்தான். கிழவன். அவன் எதிரே இருந்த அலுமினியப் பாத்திரத்தில் வெறும் செப்புக்காசுகளே கிடந்தன. அவற்றின் நடுவே நான் போட்ட இரண்டணா, வெள்ளைவெளேரென்று விழுந்தது அழகாகத்தான் இருந்தது. பார்வையற்றவன் அதை எடுத்துத் தடவிப் பார்த்தவாறே நான் இருப்பதாக அவன் நினைத்துக்கொண்ட திசைநோக்கிக் கரம் குவித்து, "சாமி, நீங்கபோற வழிக்கெல்லாம் புண்ணியமுண்டு" என்று வாழ்த்தினான். அதன்பிறகு, உண்மையிலேயே நாலணாவில் அந்த நல்லநாளைக் கொண்டாடிவிட்ட நிறைவு பிறந்தது எனக்கு.

புக்கிங் கவுண்டரின் அருகேபோய் என் சொந்தக் கிராமத்தின் பெயரைச் சொல்லிச் சில்லறையை நீட்டினேன். டிக்கெட்டை எதிர்பார்த்து நீண்டிருந்த என் கைக்குள் மீண்டும் சில்லறையே விழுந்தது.

"இன்னும் ஓரணா கொடுங்கள் ஸார்!"

"பன்னிரண்டணாதானே?"

"அது நேற்றோடு சரி. இன்னிலேருந்து அதிகம்."

என்கை சில்லறையுடன் வெளியே வந்தது. திடீரென்று பாதாளத்தில் வீழ்ச்சியுற்றது போன்ற திகைப்பில் நின்றுவிட்டேன். 'யாரிடம் போய் ஓரணா கேட்பது?'

'அதோ ஒரு பெரியவர் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறாரே, அவரிடம்...' என்று நினைக்கும்போதே, 'ஓரணாதானே, கேட்டால்தான் என்ன' என்று நினைக்கும்போதே, கேட்டால் என்ன நடக்கும் என்பது தெளிவாகிக் கொண்டிருந்தது. அங்கே! யாரோ ஒருவன் அவர் அருகே சென்றான். அவன் என்ன கேட்டானோ..? அவர் சொன்ன பதில் உலகத்துக்கே கேட்டது. எனக்கும் உறைத்தது. இரண்டணா தர்மம் செய்து ஐந்து நிமிஷம் ஆகவில்லை... ஓரணாவுக்கு யாசிப்பதா என்று யோசிக்கும் நிலை வந்துவிட்டதை எண்ணும்போது, மனம்தான் வாழ்க்கையுடன் என்னமாய்த் தர்க்கம் புரிகிறது?

'அதோ, அந்த பார்வையற்றவனின் அலுமினியப் பாத்திரத்தில் செப்புக்காசுகளின் நடுவே ஒளிவிட்டுச் சிரிக்கிறதே இரண்டணா, அது என்னுடையது!'

'அது எப்படி உன்னுடையதாகும்? நீ கொடுத்துவிட்டாய்; அவன் வாழ்த்திவிட்டான்!'

'இப்ப சந்தியில் நிற்கிறேனே? அதில் ஓரணா கூடவா எனக்குச் சொந்தமில்லை? அவன் பாத்திரத்தில் கிடந்தாலும் அது என்னுடையது அல்லவா? கேட்டால் தருவானா? தரமாட்டான். அவனுக்கு எப்படித் தெரியும் அதைப் போட்டவன் நான் என்று!'

'எடுத்துக்கொண்டால்..? அதோ, ஒரு ஆள் ஓரணா போட்டுவிட்டு அரையணா எடுத்துக் கொள்கிறானே! அதுபோல ஓரணாவைப் போட்டுவிட்டு அந்த என்னுடைய இரண்டணாவை எடுத்துக் கொண்டால்..?'

'இது திருட்டு அல்லவா?'

'திருட்டா? எப்படியும் என் பக்கத்திலிருந்து தர்மமாக ஓரணா அவனுக்குக் கிடைக்குமே! அந்த ஓரணா புண்ணியம் போதும்; என் காசை நான் எடுத்துக் கொள்கிறேன்' என்று பொருளாதார ரீதியாய்க் கணக்கிட்டுத் தர்க்கம் பண்ணியபோதிலும், திருடனைப் போல் கை நடுங்குகிறது. ஓரணாவைப் போட்டேன்; இரண்டணாவை எடுத்துக்கொண்டு திரும்பினேன்.

"அடப்பாவி!" திரும்பிப் பார்த்தேன். பார்வையற்ற விழிகள் என்னை வெறிக்க, வாழ்த்தத் திறந்த வாயால் சபிப்பது போல் அவன் கேட்டான்...

"சாமி, இதுதானுங்களா தர்மம்? யாரோ ஒரு புண்ணியவான் இரண்டணா போட்டாரு, அதை எடுத்துக்கிட்டு, ஓரணா போடறியே? பார்வையற்றவனை ஏமாத்தாதே, நரகத்துக்குத்தான் போவே!"



10th_Tamil_Unit 9.indd 209 12/08/2021 7:10:49 PM

**சிறுகதை**

நெருப்புக் கட்டியைக் கையிலெடுத்ததுபோல் அந்த இரண்டணாவை அலுமினியத் தட்டில் உதறினேன். இப்பொழுது என் கணக்கில் மூன்றணா தர்மம்.

'தெரியாம எடுத்துட்டேன்' என்று சொல்லும்போது, என் குரலில் திருட்டுத்தனம் நடுங்கியது.

ஒரு பெண் அரையணா போட்டுவிட்டுக் காலணா எடுத்துச் சென்றாள். பார்வையற்றவன் உடனே இரண்டணா இருக்கிறதா என்று தடவிப் பார்த்தான். அப்படிப் பார்த்தபோது அது இல்லாதிருந்துதான் நான் சிக்கிக்கொண்டேன் என்று புரிந்தது. அது அவனுக்குக் கிடைக்காமல் கிடைத்த செல்வம். விட மனம் வருமா?

நான் யோசித்தேன்.

'அது அவன் பணமா?'

'ஆமாம்!'

'நான்தானே தந்தேன்!'

'காசைத்தான் கடன் தரலாம்; தருமத்தைத் தரமுடியுமா? தருமத்தை யாசித்து, தந்தால்தான் பெறவேண்டும்.'

வெகுநேரம் நின்றிருந்தேன். நான் போகவேண்டிய ரயில் வந்து போய்விட்டது. அடுத்த வண்டிக்கு இன்னும் நேரமிருக்கிறது. தர்மத்தின் பலனை அடுத்த ஸ்டேஷன்வரை கால்வலிக்க நடந்து அனுபவித்தேன்.

சில வருஷங்களுக்கு முன் தமிழ்நாட்டில் ஏற்பட்ட ஒரு கோர ரயில் விபத்தைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள். அது, அன்று நான்போக இருந்து, தவறவிட்ட ரயில்தான். இந்த விபத்திலிருந்து நான் எப்படித் தப்பினேன்? தருமம் காத்ததா?

எனக்குத் தெரியாது. இதெல்லாம் தர்க்கத்திற்கு அப்பாற்பட்டது!

♦ ♦ ♦ ♦ ♦ ♦

**நூல் வெளி**

ஜெயகாந்தன் பேசி, '*எதற்காக எழுதுகிறேன்?*' என்ற தலைப்பில் கட்டுரையாகத் தொகுக்கப்பட்ட பகுதியும் '*யுகசந்தி*' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ள '*தர்க்கத்திற்கு அப்பால்*' என்னும் சிறுகதையும் பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. தான் வாழ்ந்த காலத்தில் சிக்கல்கள் பலவற்றை ஆராய, எடுத்துச்சொல்ல, தன் பார்வைக்கு உட்பட்ட தீர்ப்பைச் சொல்ல அவர் மேற்கொண்ட நடவடிக்கையே படைப்பு. அவருடைய படைப்புகள் உணர்ச்சி சார்ந்த எதிர்வினைகளாக இருக்கின்றன. இதுவே அவருக்குச் '*சிறுகதை மன்னன்*' என்ற பட்டத்தைத் தேடித்தந்தது. இவர் குறும்புதினங்களையும் புதினங்களையும் கட்டுரைகளையும் கவிதைகளையும் படைத்துள்ளார்; தன் கதைகளைத் திரைப்படமாக இயக்கியிருக்கிறார்; தலைசிறந்த உரத்த சிந்தனைப் பேச்சாளராகவும் திகழ்ந்தார்; *சாகித்திய அகாதெமி விருதையும் ஞானபீட விருதையும்* பெற்ற இவருடைய கதைகள் பிறமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

## கற்பவை கற்றபின்...

- வகுப்பு மாணவர்களின் படைப்புகளைத் திரட்டிக் குழுவாக இணைந்து கையெழுத்து இதழ் ஒன்றை உருவாக்குக.



10th_Tamil_Unit 9.indd 210 12/08/2021 7:10:49 PM

மனிதம்

கூ

கவிதைப் பேழை

# சித்தாளு

*– நாகூர்ரூமி*

**நுழையும்முன்**

வானுயர்ந்த கட்டடங்களைப் பார்த்து வியக்கிறோம். அதிசயம் என்றும் போற்றுகிறோம் . அதை உருவாக்க உழைத்தவர், வியர்த்தவர், இடுப்பொடியப் பாடுபட்டவர்களை நினைத்ததுண்டா? அந்த ஏழைகளின் துயரை, ஏங்கிடும் அவர் வாழ்வை அவர்களின் பசிக்குறி முகங்களை நொடியேனும் நினைப்பதுண்டா? இன்னலிலே இருக்கும் தொழிலாளர்கள் நிலையைக் கவிஞர்கள் நினைக்கிறார்கள்.தொழிலாளர்களின் மனச்சுமையை அறியாத செங்கற்களைப் போலவே இருக்கும் கல்மனங்களுக்குள் மனிதத்தைப் புகுத்திவிடுகிறார்கள்.

*பொற்காலமாக இருந்தாலும்*
*இவள் தலையில் எழுதியதோ*
*கற்காலம்தான் எப்போதும்.*
*தொலைந்ததே வாழ்வு என*
*தலையில் கைவைத்து*
*புலம்புவார் பூமியிலே*
*தன் வாழ்வு தொலைக்காமல்*
*தற்காத்து வைப்பதற்காய்*
*தலையில் கைவைக்கிறாள் இவள்.*
*வாழ்வில் தலைக்கனம்*
*பிடித்தவர் உண்டு.*
*தலைக்கனமே வாழ்வாக*
*ஆகிப்போனது இவளுக்கு.*

*அடுக்குமாடி அலுவலகம்*
*எதுவாயினும்*
*அடுத்தவர் கனவுக்காக*
*அலுக்காமல் இவள் சுமக்கும்*
*கற்களெல்லாம்*
*அடுத்தவேளை உணவுக்காக.*
*செத்தாலும் சிறிதளவே*
*சலனங்கள் ஏற்படுத்தும்*
*சித்தாளின் மனச்சுமைகள்*
*செங்கற்கள் அறியாது.*



## நூல் வெளி



முகம்மதுரஃபி என்னும் இயற்பெயரைக் கொண்ட நாகூர்ரூமி தஞ்சை மாவட்டத்தில் பிறந்தவர்; இவர் எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர். கவிதை, குறுநாவல், சிறுகதை, மொழிபெயர்ப்பு எனப் பலதளங்களில் இவர் தொடர்ந்து இயங்கி வருபவர். மீட்சி, சுபமங்களா, புதிய பார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளியாகியுள்ளன. இதுவரை நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல் ஆகிய மூன்று கவிதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன. மொழிபெயர்ப்புக் கவிதைகள், சிறுகதைத்தொகுதிகள் ஆகியவற்றுடன் 'கப்பலுக்குப் போன மச்சான்' என்னும் நாவலையும் படைத்துள்ளார்.

## கற்பவை கற்றபின்...

- *மனிதநேயத்தை வெளிப்படுத்தும் புதுக்கவிதைகளைத் தொகுத்து வகுப்பறையில் படித்துக் காட்டுக.*



10th_Tamil_Unit 9.indd 211 12/08/2021 7:10:50 PM

மனிதம்
௯

கவிதைப் பேழை

# தேம்பாவணி

– வீரமாமுனிவர்

OKYWV

நுழையும்முன்

பசுந்தங்கம், புதுவெள்ளி, மாணிக்கம், மணிவைரம் யாவும் ஒரு தாய்க்கு ஈடில்லை என்கிறார் ஒரு கவிஞர். தாயின் அன்பை எழுத உலகின் மொழிகள் போதாது; தாயையிழந்து தனித்துறும் துயரம் பெரிது. மகிழ்ச்சியைப் பகிர்ந்தால் பெருகும்; துயரைப் பகிர்ந்தால் குறையும்; சுவரோடாயினும் சொல்லி அழு என்பார்களல்லவா? துயரத்தைத் தாங்கிக் கொள்ளும் மனங்கள் மனிதத்தின் முகவரிகள்! சாதாரண உயிரினங்களுக்கும் துயரத்தைப் பகிர்ந்து கொள்ளும் மனிதம் இருந்தால் எத்தனை ஆறுதல்!.

### முன்நிகழ்வு

*கிறித்துவிற்குமுன் தோன்றியவர் திருமுழுக்கு யோவான். இவரை அருளப்பன் என்றும் குறிப்பிடுவர். இவரே கிறித்துவின் வருகையை அறிவித்த முன்னோடி. வீரமாமுனிவர் தன் காப்பியத்தில் இவருக்குக் கருணையன் என்று பெயரிட்டுள்ளார். கருணையன் தன் தாயார் எலிசபெத் அம்மையாருடன் கானகத்தில் வாழ்ந்து வந்தார். அச்சூழலில் அவருடைய தாய் இறந்துவிட்ட போது கருணையன் அடையும் துன்பத்தில் இயற்கையும் பங்குகொண்டு கலங்கி ஆறுதல் அளிப்பதை இப்பாடல்கள் படம்பிடித்துக் காட்டுகின்றன.*



இரங்கி அழும் கருணையனுக்கு இரங்கும் இயற்கை

### எலிசபெத் அம்மையார் அடக்கம், கருணையன் கண்ணீர்

*1. பூக்கையைக் குவித்துப் பூவே*
*புரிவொடு காக்கென்று அம்பூஞ்*
*சேக்கையைப் பரப்பி இங்கண்*
*திருந்திய அறத்தை யாவும்*
*யாக்கையைப் பிணித்தென்று ஆக*
*இனிதிலுள் அடக்கி வாய்ந்த*
*ஆக்கையை அடக்கிப் பூவோடு*
*அழுங்கணீர் பொழிந்தான் மீதே.* 2388

### சொல்லும் பொருளும்

சேக்கை – படுக்கை
யாக்கை – உடல்
பிணித்து – கட்டி
வாய்ந்த – பயனுள்ள

2. *வாய்மணி யாகக் கூறும்*
*வாய்மையே மழைநீ ராகித்*
*தாய்மணி யாக மார்பில்*
*தயங்கியுள் குளிர வாழ்ந்தேன்*
*தூய்மணி யாகத் தூவும்*
*துளியிலது இளங்கூழ் வாடிக்*
*காய்மணி யாகு முன்னர்க்*
*காய்ந்தெனக் காய்ந்தேன் அந்தோ.* 2400

**சொல்லும் பொருளும்**

இளங்கூழ் – இளம்பயிர்
தயங்கி – அசைந்து
காய்ந்தேன் – வருந்தினேன்

3. *விரிந்தன கொம்பில் கொய்த*
*வீயென உள்ளம் வாட*
*எரிந்தன நுதிநச்சு அம்புண்டு*
*இரும்புழைப் புண்போல் நோகப்*
*பிரிந்தன புள்ளின் கானில்*
*பெரிதழுது இரங்கித் தேம்பச்*
*சரிந்தன அசும்பில் செல்லும்*
*தடவிலா தனித்தேன் அந்தோ!* 2401

**சொல்லும் பொருளும்**

கொம்பு – கிளை
புழை – துளை
கான் – காடு
தேம்ப – வாட
அசும்பு – நிலம்

4. *உய்முறை அறியேன்; ஓர்ந்த*
*உணர்வினொத்து உறுப்பும் இல்லா*
*மெய்முறை அறியேன்; மெய்தான்*
*விரும்பிய உணவு தேடச்*
*செய்முறை அறியேன்; கானில்*
*செல்வழி அறியேன்; தாய்தன்*
*கைமுறை அறிந்தேன் தாயும்*
*கடிந்தெனைத் தனித்துப் போனாள்.* 2403

**சொல்லும் பொருளும்**

உய்முறை – வாழும் வழி
ஓர்ந்து – நினைத்து
கடிந்து – விலக்கி

## இயற்கை கொண்ட பரிவு

5. *நவமணி வடக்க யில்போல்*
*நல்லறப் படலைப் பூட்டும்*
*தவமணி மார்பன் சொன்ன*
*தன்னிசைக்கு இசைகள் பாடத்*
*துவமணி மரங்கள் தோறும்*
*துணர்அணிச் சுனைகள் தோறும்*
*உவமணி கானம்கொல் என்று*
*ஒலித்து அழுவ போன்றே.* * 2410

**சொல்லும் பொருளும்**

உவமணி – மணமலர்
படலை – மாலை
துணர் – மலர்கள்

## பாடலின் பொருள்

1. கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து, "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக'' என்று கூறி, குழியினுள் அழகிய மலர்ப்படுக்கையைப் பரப்பினான். இவ்வுலகில் செம்மையான அறங்களையெல்லாம் தன்னுள் பொதிந்து வைத்து, பயனுள்ள வாழ்க்கை நடத்திய தன் அன்னையின் உடலை, மண் இட்டு மூடி அடக்கம் செய்து, அதன்மேல் மலர்களையும் தன் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

2. "என் தாய், தன் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு, அத்தாயின் மார்பில் ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்தேன். ஐயோ! இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே தூய மணிபோன்ற தூவும் மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப்போல, நானும் இப்போது என் தாயை இழந்து வாடுகின்றேனே!"

3. "என் மனம் பரந்து நின்ற மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போல வாடுகிறது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பினால் துளைக்கப்பட்டதால் உண்டான, புண்ணின் வலியால் வருந்துவது போன்றது என் துயரம். துணையைப் பிரிந்த ஒரு பறவையைப்போல நான் இக்காட்டில் அழுது இரங்கி வாடுகிறேன்; சரிந்த வழுக்கு நிலத்திலே, தனியே விடப்பட்டுச் செல்லும் வழி தெரியாமல் தவிப்பவன் போல் ஆனேன்."

4. "நான் உயிர்பிழைக்கும் வழி அறியேன்; நினைந்து கண்ட அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத இந்த உடலின் தன்மையை அறியேன்; உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக் கொணரும் வழிவகைகளை அறியேன்; காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன்; என் தாய் தன் கையால் காட்டிய முறைகளை மட்டுமே அறிவேன். என்னைத் தவிக்க விட்டுவிட்டு என்தாய் தான் மட்டும் தனியாகப் போய்விட்டாளே!"

5. நவமணிகள் பதித்த மணிமாலைகளைப் பிணித்ததுபோன்று நல்ல அறங்களை எல்லாம் ஒரு கோவையாக இணைத்த தவத்தையே அணிந்த மார்பனாகிய கருணையன், இவ்வாறு புலம்பிக் கூறினான். அது கேட்டுப் பல்வேறு இசைகளை இயக்கியது போன்று, தேன்மலர்கள் பூத்த மரங்கள் தோறும் உள்ள, மணம்வீசும் மலர்களும் மலர்ந்த சுனை தோறும் உள்ள, பறவைகளும் வண்டுகளும் அக்காட்டினிலே அழுவன போன்று கூச்சலிட்டன.

## இலக்கணக் குறிப்பு

| | | |
|---|---|---|
| காக்கென்று | – | காக்கவென்று என்பதன் தொகுத்தல் விகாரம் |
| கணீர் | – | கண்ணீர் என்பதன் இடைக்குறை |
| காய்மணி, உய்முறை, செய்முறை | – | வினைத்தொகைகள் |
| மெய்முறை | – | வேற்றுமைத்தொகை |
| கைமுறை | – | மூன்றாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்கதொகை |

### பகுபத உறுப்பிலக்கணம்

அறியேன் – அறி + ய் + ஆ + ஏன்

அறி – பகுதி

ய் – சந்தி

ஆ – எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது

ஏன் – தன்மை ஒருமை வினைமுற்று விகுதி

ஒலித்து – ஒலி + த் + த் + உ;

ஒலி – பகுதி;

த் – சந்தி;

த் – இறந்தகால இடைநிலை;

உ – வினையெச்ச விகுதி

**இஸ்மத் சன்னியாசி –தூய துறவி**

வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் என்னும் மன்னரைச் சந்தித்து உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியைக் கற்றுக்கொண்டார். இவருடைய எளிமையையும், துறவையும் கண்டு வியந்த சந்தாசாகிப் இஸ்மத் சன்னியாசி என்னும் பட்டத்தை வீரமாமுனிவருக்கு அளித்தார். இந்தப் பாரசீகச் சொல்லுக்குத் தூய துறவி என்று பொருள்.

**நூல் வெளி**





தேம்பா + அணி எனப் பிரித்து வாடாதமாலை என்றும், தேன் + பா + அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. கிறித்துவின் வளர்ப்புத் தந்தையாகிய சூசையப்பர் என்னும் யோசேப்பினைப் (வளனை) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது. இப்பெருங்காப்பியம் 3 காண்டங்களையும் 36 படலங்களையும் உள்ளடக்கி, 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.

17ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது தேம்பாவணி. இக்காப்பியத்தை இயற்றியவர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்சுடான்சு சோசப் பெசுகி. தமிழின் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கண நூல்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்தக் குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் ஆகியவற்றை இவர் படைத்துள்ளார்.



## கற்பவை கற்றபின்...

1. *வீரமாமுனிவர் தமிழகத்தில் தங்கிப் பணிசெய்த இடங்களைப்பற்றியும் அங்கு அவர் ஆற்றிய தமிழ்ப்பணிகளைப் பற்றியும் நூலகத்திற்குச் சென்று செய்திகளைத் திரட்டுக .*

2. *கண்ணதாசனின் இயேசு காவியத்தில் மலைப்பொழிவுப் பகுதியைப் படித்து அதில் வரும் அறக்கருத்துகளை எழுதுக.*


விரிவானம்

# மனிதம்

௯

# ஒருவன் இருக்கிறான்

– கு. அழகிரிசாமி




துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது! எப்படிப்பட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை இருக்கிறது. துணையே இல்லாதவர் என்று கருதி நாம் அலட்சியம் செய்பவருக்கும் துணையொன்று இருப்பதை அறியும்போது நமக்குக் குற்றவுணர்ச்சி தோன்றும் வாய்ப்பிருக்கிறது. எப்படிப்பட்டவருக்கும் ஒரு துணை இருக்கும். அந்தத் துணைதான் மனிதத்தின் வேருக்கு நீர். அதில் மனிதம் துளிர்க்கும்.

பத்துப் பதினைந்து நாட்களுக்கு முன்னால் நான் ஆபீசிலிருந்து திரும்பி வீட்டுக்கு வந்தபோது அவன் வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். வயது இருபத்தைந்து இருக்கும். எலும்பும் தோலுமான உடம்பு. எண்ணெய் காணாத தலை, காடாக வளர்ந்து கிடந்தது. சட்டையும் வேஷ்டியும் ஒரே அழுக்கு. சட்டையில் ஒரு பொத்தான்கூட இல்லை. கால்களைத் தொங்கப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த அவன், இடது கையால் அடிவயிற்றைப் பிடித்துக்கொண்டிருப்பதையும் பார்த்தேன். என்னை ஒரு தரம் ஏறிட்டுப் பார்த்தான். காய்ந்துபோன விழிகள். அவற்றில் ஒரு பயம். தன் நிலையை எண்ணிக் கூசும் ஓர் அவமானம்.

"யாரப்பா நீ? எங்கே வந்தே?" என்று முகத்தில் வெறுப்பைப் பூரணமாகக் காட்டிக்கொண்டு கேட்டேன்.

கையை அடிவயிற்றிலிருந்து எடுக்காமலே ஒரு பெருமூச்சுவிட்டான். பிறகு பதில் சொன்னான். "தங்கவேலு வீட்டுக்கு வந்திருக்கிறேன்".

தங்கவேலு என் பக்கத்துக் குடித்தனக்காரர்.

மனைவியிடம், "வயித்துவலிக்காரன் வந்திருக்கிறான்போல் இருக்கிறது. பக்கத்து வீட்டுக்கு விருந்தாளியா!" என்று தமாஷாகச் சொன்னேன்.

"காஞ்சிபுரம். பக்கத்து வீட்டு அம்மாவுக்கு அக்கா மகனாம். வைத்தியம் பார்க்க வந்திருக்கிறான்" என்றாள் மனைவி.

இரவு தங்கவேலு வீடு திரும்பினார். ஒன்பது மணிக்கெல்லாம் அவன் ஒரு பழைய தலையணையையும் கிழிந்த போர்வையையும் எடுத்துக்கொண்டு வந்தான். தங்கவேலு அவனை அழைத்துக்கொண்டு வந்து, நான்கு குடித்தனங்களுக்கும் பொதுவான சிமிண்டு நடைபாதையில் படுத்துக்கொள்ளச் சொன்னார். அந்த இடம் என்னுடைய அறையின் மற்றொரு ஜன்னலுக்கு நேராக இருந்தது. அந்நோயாளி என் தலைமேல் வந்து உட்கார்ந்துகொண்டதாகவே நினைத்தேன். அதை ஆட்சேபிக்கவும் முடியவில்லை. தங்கவேலுவின் குடித்தனப் பகுதியில் அவன் படுத்துக் கொள்ளலாம் என்றால், அங்கே உண்மையிலேயே இடம் இல்லை.

எனக்கு மிகவும் கவலையாகப் போய்விட்டது. அதை மனைவியிடமும் சொன்னேன். "பாவம்! நோயாளியாய் இருக்கிறான். கிடந்துட்டுப் போகட்டும்" என்றாள் மிகுந்த இரக்கத்தோடு.

மறுநாள் தங்கவேலுவை விசாரித்தபோது அவனைப் பற்றி மேற்கொண்டு சில விவரங்கள் கிடைத்தன.

அவன் அவருடைய மனைவிக்கு அக்கா பிள்ளை என்பது உண்மைதான். தாய் தகப்பன் கிடையாது. அவனுக்கு இருந்த உறவு தங்கவேலுவின் மனைவியான அவனுடைய சித்தியும், காஞ்சிபுரத்திலேயே உள்ள தாய்மாமன் ஒருவனுந்தான். அந்த ஊரில் தாய்மாமன் வீட்டிலேயே சாப்பிட்டுக்கொண்டு, ஒரு சைக்கிள் ரிப்பேர்க் கடையில் தினக்கூலியாக ஒன்றரையும் இரண்டும் வாங்கிக்கொண்டு வேலைசெய்து வந்தானாம். வயிற்றுவலி வந்து ஆறேழு மாதங்களாக வேலை இல்லை. சம்பாத்தியமும் இல்லை. நோயும் வேறு. இந்த நிலையில் தாய்மாமன் வீட்டிலிருந்து அவனை ஒரு வழியாக விரட்டிவிட்டார்கள். அங்கிருந்து, சித்தியை நம்பிச் சென்னைக்கு வந்திருக்கிறான், வைத்தியம் பார்ப்பதற்கு.

இவ்வளவு கதையையும் தங்கவேலு சொல்லிக்கொண்டிருக்கும் போது அவன் தெருத் திண்ணையில்தான் இருந்தான். நாங்கள் பேசியது அவனுக்கு நன்றாகக் கேட்டிருக்கும். கேட்க வேண்டும் என்பதற்காகத்தான் தங்கவேலுவும் குரலைச் சற்று உயர்த்தியே பேசினார். அவர் வாயிலிருந்து வெளிப்படும் ஒவ்வொரு சொல்லும் அவனைக் குற்றம் சாட்டுவது போலவும், அவன் எதற்காக இங்கே வந்தான் என்று கேட்பதுபோலவும், அவன் வீட்டை விட்டு உடனே தொலைந்தால் நல்லது என்று கருதுவது போலவும் ஒலித்தது. எனக்கும் அது பிடித்திருந்தது.

தங்கவேலுவின் மனைவிக்கும் அவன் வந்திருப்பது பிடிக்கவில்லையாம்! என் மனைவி சொன்னதைப் பார்க்கும்போது, தங்கவேலுவை முந்திக்கொண்டு அவனை விரட்டுவதற்கு அவள் அவசரப்படுவதாகத் தெரிந்தது. எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை.

"தொலைகிற பீடை சீக்கிரமா தொலையட்டும்" என்று சொல்லி என் மனப் பாரத்தைச் சிறிது இறக்கி வைத்தேன்.

என் மனைவி அப்பொழுதும் அவனிடம் இரக்கம் காட்டிப் பேசினாள். "ஏன் இப்படிச் சொல்றீங்க? அவன் நம்மை என்ன செய்கிறான்? எதுக்கு ஓர் அனாதையைப் போய் இப்படிச் சொல்லணும்?" என்று என்னை இலேசாகக் கண்டிக்கவே ஆரம்பித்துவிட்டாள்.

நாளை நம் குழந்தைகளுக்கு ஏதாவது ஒண்ணுன்னா இவனா வந்து தாங்கப் போறான்?" என்று கோபத்தைக் காட்டிக்கொள்ளாமலே சொன்னேன்.

"அப்படி ஒண்ணும் வந்துடாது. இப்படிப் பயந்தால் உலகத்திலேயே வாழ முடியாது".

"சரி சரி, புத்திமதி நல்லாத்தான் இருக்கு. பேசாமல் போ" என்று அவள் வாயை அடைத்துவிட்டு, அவளோடு பேசப் பிடிக்காமல் வந்துவிட்டேன்.

ஏறக்குறையத் தினந்தோறும் இப்படி நாங்கள் முரண்படுவதும், நான் கவலையும் பயமும் கொள்ளுவதுமாக ஆகிவிட்டது.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தன. ஒவ்வொரு நாள் இரவும் அவன் ஓலத்துடனும் என் கவலையுடனுந்தான் கழிந்தது. ஆறாம் நாள் தங்கவேலு நான் சற்றும் எதிர்பாராத விதத்தில் அவனை அழைத்துக்கொண்டு வெளியே கிளம்பினார். நான் போய் எட்டிப் பார்த்தேன். அவனைச் சர்க்கார் ஆஸ்பத்திரியில் சேர்த்துவிடப் போவதாகத் தங்கவேலு சொன்னார். எனக்கு அப்போது ஏற்பட்ட மகிழ்ச்சியையும் நிம்மதியையும் இவ்வளவு அவ்வளவு என்று கூறுவதற்கில்லை.

"அதுதான் நல்ல யோசனை, அங்கே நல்லா கவனிப்பாங்க" என்று ஒப்புக்குச் சொன்னேன். அவன் என்னைப் பார்த்து, என் பூரண ஆசீர்வாதத்தை வேண்டி, கை எடுத்துக் கும்பிட்டு, "நான் போய்ட்டு வர்றேன்" என்றான்.

"போய்ட்டு வாப்பா. கடவுள் கிருபையால் சீக்கிரம் குணமாகட்டும், போய்ட்டு வா" என்று வாழ்த்தினேன்.

மனத்தில் நஞ்சாக வெறுத்துக்கொண்டு அவனை இப்படிப் பொய்யாக வாழ்த்தி அனுப்பியதை இன்று நினைத்தாலும் எனக்கு வெட்கமாக இருக்கிறது. அவன் என்னையும் மதித்து என் ஆசீர்வாதத்திலும் நம்பிக்கை வைத்துக் கும்பிட்டதை நினைத்துவிட்டாலோ, நெஞ்சில் ஈட்டி பாய்வது போல் இருக்கிறது.

தங்கவேலுவும் அவனும் டாக்ஸியில் ஏறிக்கொண்டு போனார்கள்.

"ஒரு பெரிய பாரம் நீங்கியது" என்று தங்கவேலுவின் மனைவி என் மனைவியிடம் சொன்னதைக் கேட்டேன். நான் சொல்ல நினைத்த வார்த்தைகள் அவை. என் மனைவி ஒன்றும் சொல்லவில்லை.

தங்கவேலு சொன்னபடியே அவனுக்கு அப்புறம் ஆபரேஷன் செய்யப்பட்டது. அதற்கு முன்பு ஒரு நாள் என் மனப்போக்கை அடியோடு மாற்றி, என்னை நினைத்து நானே வெட்கப்படும்படியாகவும், அவனை நினைத்து நான் கண்ணீர்விடும்படியாகவும் ஒரு சம்பவம் நடந்தது.

அன்று இரண்டாவது சனிக்கிழமை. எனக்கு விடுமுறை. வீட்டிலேயே இருந்தேன். தங்கவேலு எங்கோ வெளியே போயிருந்தார். அவருடைய மனைவி தன் இரு குழந்தைகளோடு பகல் காட்சி சினிமா பார்க்கப் பதினொரு மணிக்கே கியூவில் நிற்கப் போய்விட்டாள் என்று கேள்விப்பட்டேன். மத்தியானம் ஒரு மணிக்கு ஒருவன் வந்து, "குப்புசாமி இருக்கிறாரா?" என்று கேட்டான். அவனுக்குச் சுமார் முப்பது வயது இருக்கும்.

"குப்புசாமியா? அப்படி இங்கே யாரும் இல்லையே! நீ யார்?" என்று நான் கேட்டேன்.

"காஞ்சிபுரம். அங்கிருந்துதான் குப்புசாமி இங்கே வந்தாரு. இது தங்கவேலு வூடுதானே?"

"ஆமாம், ஆனால் குப்புசாமின்னு யாரும் இல்லையே இங்கே!"

"இங்கேதான் வந்தாருங்க – வவுத்து வலிக்கு மருந்து சாப்புடணும்னு ..."

இந்தச் சம்பாஷணையை உள்ளேயிருந்து கேட்ட என் மனைவி எழுந்து ஓடி வந்தாள்.

"குப்புசாமி அந்தப் பையன்தான்; ஆஸ்பத்திரியிலே சேர்த்திருக்கிற பையன்" என்றாள்.

"குப்புசாமியைப் பார்க்கத்தான் வந்தேங்க. ஊருக்கும் அவசரமா போகணும். அவங்க வர ரொம்ப நேரமாவுங்களா?... குப்புசாமி இங்கே வந்தாரா இல்லையா?" என்று கவலையோடு அவன் கேட்டான்.

அவன் குப்புசாமிக்கு நன்றாகத் தெரிந்தவனாம். முந்தின நாள் இரவு சென்னையில் உள்ள தன் சொந்தக்காரர் ஒருவரைப் பார்க்க வந்தவன், ஊர் திரும்பும் வழியில் அவசர அவசரமாகக் குப்புசாமியைப் பார்க்க வந்திருக்கிறான்.

குப்புசாமி வேலை செய்துவந்த சைக்கிள் கடைக்கு எதிரே ஒரு விறகுக் கடையில் அவன் கூலி வேலை செய்பவன். அவனுடைய பக்கத்து வீட்டுக்காரன் வீரப்பன் என்பவனும் குப்புசாமியும் ரொம்ப ரொம்பச் சிநேகமாம்.

குப்புசாமி நோய் காரணமாக வேலையை இழந்திருந்த சமயத்தில் தாய்மாமன் வீட்டில் துன்பப்பட்டுக்கொண்டிருந்தபோது வீரப்பன்தான் அவ்வப்போது அவனை அழைத்துவந்து சாப்பாடு போடுவானாம். வீரப்பன் வீடு கட்டுகிற ஒரு மேஸ்திரியிடம் சிப்பந்தியாக வேலை செய்பவன். சில நாட்கள் வேலையில்லாமல் போய், வரும்படியும் இல்லாமல் கஷ்டப்படுகிற ஏழையாக இருந்தாலும், கடன் வாங்கியாவது சிநேகிதனுக்கு உதவி செய்து வந்தானாம் வீரப்பன்.

காஞ்சிபுரத்துக்காரன் இதைச் சொல்லும்போது, 'இவனுக்கு (குப்புசாமிக்கு) இப்படி ஒரு நட்பா? இவன் உயிருக்கு இவ்வளவு மதிப்பு கொடுக்கிற ஓர் ஆத்மாவும் இந்த உலகத்தில் இருக்கிறதா?' என்று நான் வியந்துகொண்டிருந்தேன்.

காஞ்சிபுரத்தான் பேச்சை முடித்துக்கொண்டு, ஊருக்குப் புறப்படத் தயாரானான்.

"சரிங்க, அப்போ நான் போயிட்டு வர்ரேனுங்க. குப்புசாமி கிட்டக் குடுக்கச் சொல்லி வீரப்பன் ஒரு லெட்டர் குடுத்தான் இதைக் குடுத்துடுங்க. மூணு ரூபாயும் குடுத்தனுப்பினான்..."

சட்டைப் பையிலிருந்து கடிதத்தையும் மூன்று ரூபாயையும் எடுத்து, "குப்புசாமிகிட்டே குடுத்துடுங்க. இல்லே, தங்கவேலு கிட்ட வேணும்னாலும் குடுத்துடுங்க. இன்னொரு சமயம் பட்டணம் வந்தா ஆசுபத்ரிலே போயி பார்க்கிறேன்" என்று சொல்லிவிட்டுக் கடிதத்தையும் ரூபாயையும் என்னிடம் கொடுத்தான். அப்புறம் ஒரு நிமிஷம் எதையோ யோசித்துப் பார்த்தான். மனசுக்குள் கணக்கு போடுகிறவன்போல் அவனுடைய முகபாவனையும் தலையசைப்பும் இருந்தன. மறு நிமிஷத்திலேயே, "இந்தாருங்க, இதையும் குப்புசாமிக்குக் குடுக்கச் சொல்லுங்க" என்று சொல்லித் தன் இடது கையில் தொங்கிய துணிப் பையிலிருந்து இரண்டு சாத்துக்குடிப் பழங்களை எடுத்துக் கொடுத்தான்.

"என் பசங்களுக்கு நாலு பழம் வாங்கினேன். போகட்டும். இவரு ஆசுபத்திரிலே இருக்கிறாரு. நாம்ப வேறு என்னத்தைச் செய்யப் போறோம்?"

இத்துடனும் அவன் நிறுத்தவில்லை! தன் உபயமாக ஒரு ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்து என்னிடம் கொடுத்து, குப்புசாமியிடமோ தங்கவேலுவிடமோ சேர்க்கச் சொன்னான். அவன் குப்புசாமிக்காகத்தான் கொடுத்தானோ, குப்புசாமிக்காகக் காஞ்சிபுரத்தில் இருந்துகொண்டு கண்ணீர் வடிக்கும் அந்த வீரப்பன், குப்புசாமியின் உயிருக்குக் கொடுக்கும் மதிப்பைக் கண்டுதான் கொடுத்தானோ?

என்னிடமும் என் மனைவியிடமும் விடைபெற்றுக்கொண்டு காஞ்சிபுரத்துக்காரன் போய்விட்டான்.



அவன் கொடுத்த கடிதத்தின் மடிப்பைப் பிரித்து வாசித்துப் பார்த்தேன். வீரப்பன் எழுதிய அந்தக் கடிதத்தில் எழுத்துப் பிழைகளையும் பிற தவறுகளையும் திருத்திக் கீழே கொடுக்கிறேன்.

"என் உயிர் நண்பன் குப்புசாமிக்கு எழுதிக்கொண்டது. நீ இங்கிருந்து போனதிலிருந்து என் உயிர் இங்கே இல்லை. சதா உன் ஞாபகமாகத்தான் இருக்கிறேன். கடவுள் அருளால் நீ உடம்பு சௌக்கியமாகி வரவேண்டும் என்று தினமும் ஒரு தடவை கோவிலுக்குப் போய்க் கும்பிடுகிறேன். எனக்கு இப்போது வேலை இல்லை. கொஞ்ச நாட்களாக வருமானம் இல்லாமல் இருக்கிறேன். நேற்று கட்டைத் தொட்டி ஆறுமுகம் பட்டணம் போவதாகச் சொன்னான். உடனே, ஓடி ஒருவரிடம் மூன்று ரூபாய் கடன் வாங்கி அவனிடம் கொடுத்தனுப்பியிருக்கிறேன். நானே வரலாம் என்று பார்த்தேன். வந்தால் இந்த மூன்று ரூபாயும் பஸ்ஸுக்குச் செலவாகிவிடும். உனக்குச் சமயத்தில் உதவியாக இருக்கும் என நினைத்து, நான் ரூபாயைச் செலவழித்துக்கொண்டு வராமல், ஆறுமுகத்திடம் கொடுத்தனுப்பி இருக்கிறேன். இன்னோர் இடத்திலும் பணம் கேட்டிருக்கிறேன். கிடைத்தால் நான் சீக்கிரம் உன்னைப் பார்க்க வருவேன். உன்னைப் பார்த்தால்தான் நான் தின்னும் சோறு, சோறாக இருக்கும்.

உன் நண்பன்
க. வீரப்பன்,
காஞ்சிபுரம்.

கடிதத்தைப் பார்த்துவிட்டு நிம்மதியோடு என்னால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. என் மனைவியின் எதிரே கண்ணீர்விடவும் வெட்கமாக இருந்தது. அவளிடம் கடிதத்தைக் கொடுத்து, "படித்துப் பார்" என்று அவசர அவசரமாகச் சொல்லிவிட்டு, குளிக்கும் அறைக்குள் போய் உண்மையிலேயே கண்ணீர் சிந்தி அழுதுவிட்டேன். முகத்தைக் கழுவிக் கொண்டு நான் வெளியே வந்தபோது, என் மனைவி வழக்கம்போல் இரக்கம் நிறைந்த குரலில், "பாவம்!" என்றாள். "ஏழைகள்தான் எவ்வளவு பிரியமாக

இருக்கிறார்கள்!" என்று பரவசத்துடனும் உணர்ச்சிப் பெருக்குடனும் சொன்னாள்.


"நாமும் தங்கவேலுவோடு இன்னிக்கு ஆசுபத்திரிக்குப் போகலாமா?" மனைவி ஆச்சரியப்பட்டாள் என்பதைவிட, என் சொற்களைக் கேட்டு ஆனந்தம் அடைந்தாள் என்றுதான் சொல்லவேண்டும்.

"போகலாமே. ஒரு டஜன் சாத்துக்குடி வாங்கிக் கொண்டால் நல்லது. சும்மாவா போவது?"

தனியாக உட்கார்ந்திருந்த நான் என்னை நினைத்தே வருந்தியதையும் வெட்கப் பட்டதையும் விவரிக்கவே முடியாது. காஞ்சிபுரத்தில் இருக்கும் வீரப்பனை, உலகமே வெறுத்து ஒதுக்கிய குப்புசாமியிடம் உயிரையே வைத்திருக்கும் அந்தப் புண்ணிய மூர்த்தியைப் பார்க்க வேண்டும்போல் இருந்தது. 'குப்புசாமிக்கும் ஒருவன் இருக்கிறான். குப்புசாமிக்கு மட்டுமா? எனக்குமே ஒருவனாக அவன் இருக்கிறான்.'

பழங்கள் வாங்கக் கடைத்தெருவுக்குப் போனேன்.

(*கலைமகள்*, பிப்ரவரி 1966)



**முன்தோன்றிய மூத்தகுடி**

*"ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து*
*அரசு பட அமர் உழக்கி"*

*மதுரைக்காஞ்சி, 127–130*

**திருவாரூர் மாவட்டத்தின் ஆலங்கானம்**

## நூல் வெளி



ஒருவன் இருக்கிறான் கதை 'கு.அழகிரிசாமி சிறுகதைகள்' என்ற தொகுப்பில் இடம்பெற்றுள்ளது.

கு.அழகிரிசாமி, அரசுப்பணியை உதறிவிட்டு முழுதாக எழுத்துப்பணியை மேற்கொண்டவர்; மென்மையான நகைச்சுவையும் சோக இழையும் ததும்பக் கதைகளைப் படைப்பதில் பெயர் பெற்றவர்; கரிசல் எழுத்தாளர்கள் வரிசையில் மூத்தவர் எனலாம். கி.ரா.வுக்கு இவர் எழுதிய கடிதங்கள் இலக்கியத்தரம் வாய்ந்தவை. படைப்பின் உயிரை முழுமையாக உணர்ந்திருந்த கு.அழகிரிசாமி பல இதழ்களில் பணியாற்றியவர்; மலேசியாவில் இருந்தபோது அங்குள்ள படைப்பாளர்களுக்குப் படைப்பு தொடர்பான பயிற்சி அளித்தவர். இவர் பதிப்புப் பணி, நாடகம் எனப் பலதுறைகளிலும் முத்திரை பதித்தவர். தமிழ் இலக்கியத்தில் ஆர்வம்கொண்டு திறனாய்வு நூல்களையும் படைத்தவர்.

## கற்பவை கற்றபின்...

1. *சமூகத் தொண்டு செய்து உயர்ந்த விருதுகளைப் பெற்ற ஆளுமைகளைப் பட்டியலிட்டு அவர்கள் செய்த சமூகப்பணி குறித்துக் கலந்துரையாடுக.*
2. *"அகநக நட்பதே நட்பு" – என்ற தலைப்பில் நண்பர்களுக்கு உதவிய சூழல்களைச் சுவைபட எழுதுக.*

கற்கண்டு

மனிதம்

௬

# அணி

மக்களுக்கு அழகு சேர்ப்பன அணிகலன்கள். அது போன்று செய்யுள்களுக்கு அழகு செய்து சுவையை உண்டாக்குவன *அணிகள்*. அத்தகைய அணிகள் சிலவற்றைப் பற்றி இங்குக் காண்போம்.

## தற்குறிப்பேற்ற அணி

இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது *தற்குறிப்பேற்ற அணி* எனப்படும்.

எ.கா.

**'போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி**
**'வாரல்' என்பனபோல் மறித்துக்கை காட்ட'**

### பாடலின் பொருள்

கோட்டை மதில் மேல் இருந்த கொடியானது வரவேண்டாம் எனத் தடுப்பதுபோல, கை காட்டியது என்பது பொருள்.

### அணிப்பொருத்தம்

கோவலனும், கண்ணகியும் மதுரை மாநகருக்குள் சென்றபோது மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால் இளங்கோவடிகள், கோவலன் மதுரையில் கொலை செய்யப்படுவான் எனக்கருதி அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டா' என்று தெரிவிப்பது போலக் காற்றில் அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இவ்வாறு இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவது *தற்குறிப்பேற்ற அணி* எனப்படும்.

## தீவக அணி

தீவகம் என்னும் சொல்லுக்கு 'விளக்கு' என்று பொருள். ஓர் அறையில், ஓர் இடத்தில் வைக்கப்பட்ட விளக்கானது அவ்வறையில் பல இடங்களிலும் உள்ள பொருள்களுக்கு வெளிச்சம் தந்து விளக்குதல் போல, செய்யுளின் ஓரிடத்தில்நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலும் உள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்பட்டது.

இது முதல்நிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என்னும் மூன்று வகையாக வரும்.

எ.கா.

**சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்**
**ஏந்து தடந்தோள், இழிகுருதி – பாய்ந்து**
**திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்,**
**மிசைஅனைத்தும் புள்குலமும் வீழ்ந்து**

(*சேந்தன*–சிவந்தன; *தெவ்*–பகைமை; *சிலை*–வில்; *மிசை*–மேலே; *புள்*–பறவை;)

### பாடலின் பொருள்

அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன; அவை சிவந்த அளவில் பகை மன்னர்களுடைய பெரிய தோள்கள்சிவந்தன; குருதி பாய்ந்து திசைகள் அனைத்தும் சிவந்தன;வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகளும் சிவந்தன; குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன.

### அணிப் பொருத்தம்

**வேந்தன் கண் சேந்தன**
**தெவ்வேந்தர் தோள் சேந்தன**
**குருதி பாய்ந்து திசை அனைத்தும் சேந்தன**
**அம்பும் சேந்தன**

**புள் குலம் வீழ்ந்து**

**மிசைஅனைத்தும் சேந்தன**

இவ்வாறாக முதலில் நிற்கும் 'சேந்தன' (சிவந்தன) என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்திப் பொருள் தருகிறது. அதனால் இது தீவக அணி ஆயிற்று.

## நிரல்நிறை அணி

*நிரல்* = வரிசை; *நிறை* = நிறுத்துதல்.

சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வது நிரல்நிறை அணி எனப்படும்.

**எ.கா.**

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது. –குறள்: 45**

### பாடலின் பொருள்

இல்வாழ்க்கை அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.

### அணிப்பொருத்தம்

இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைபடக் கூறியுள்ளமையால் இது நிரல் நிறை அணி ஆகும்.

## தன்மையணி

எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர். இவ்வணி நான்கு வகைப்படும். பொருள் தன்மையணி, குணத் தன்மையணி, சாதித் தன்மையணி, தொழிற் தன்மையணி என்பனவாகும்.

**எ.கா.**

**மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்**

**கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் – வையைக் கோன்**

**கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்**

**உண்டளவே தோற்றான் உயிர்.**

*சிலம்பு* – வழக்குரை காதை வெண்பா

### பாடலின் பொருள்

உடம்பு முழுக்கத் தூசியும் விரித்த கருமையான தலைமுடியும் கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதி பாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிரை நீத்தான்.

### அணிப்பொருத்தம்

கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களின் மூலம் கூறியமையால் இது தன்மை நவிற்சியணி எனப்படும்.

"எவ்வகைப் பொருளு மெய்வகை விளக்குஞ்

சொன்முறை தொடுப்பது தன்மை யாகும்"

*– தண்டியலங்காரம்: 27*

## கற்பவை கற்றபின்...

1. முன் வகுப்புகளில் கற்ற அணிகளை எடுத்துக்காட்டுகளுடன் தொகுத்து ஒப்படைவு ஒன்றை உருவாக்குக.
2. பாடப்பகுதியில் உள்ள திருக்குறளில் பயின்றுவரும் அணிகளைக் கண்டறிந்து வகுப்பறையில் விளக்குக.

# திறன் அறிவோம்

## பலவுள் தெரிக.

1. "இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும் ..." – இவ்வடிகளில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

2. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று ...................................... வேண்டினார்.

அ) கருணையன், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத், தமக்காக

இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

4. வாய்மையே மழைநீராகி – இத் தொடரில் வெளிப்படும் அணி

அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்

5. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் – இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது:

அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்

ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்

இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்

ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

## குறுவினா

1. தீவக அணியின் வகைகள் யாவை?

2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு – இத்தொடரை இரு தொடர்களாக்குக.

3. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" – உவமை உணர்த்தும் கருத்து யாது?

4. அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?



5. 'வாழ்வில் தலைக்கனம்', 'தலைக்கனமே வாழ்வு' என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?

## சிறுவினா

1. "சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது" – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

2. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.

3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

4. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக.

## நெடுவினா

1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.

2. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க.

3. 'அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

## மொழியை ஆள்வோம்!

### படித்துச் சுவைக்க.

"எழுத்தால், பேச்சால், ஆற்றலால், அறிவால், தொண்டால், பண்பால், பணியால், கனிவால் தமிழக வரலாற்றில் குறிக்கப்படும்படியான அந்த அறிஞர் பெருமகனாரின் அருமைத் திருமுகத்தைக் கடைசியாகத் தரிசிக்க வழியெல்லாம் விழியெல்லாம் நீர்தேக்கி ஊர்வலத்தைப் பார்க்கக் காத்திருந்த மக்கள் எத்தனை லட்சம் பேர்! அண்ணாவின் பொன்னுடலை நன்றாகத் தாங்கி வந்த பீரங்கி வண்டி தூரத்தில் வந்தபோதே பொங்கிப் பொருமித் துடித்த உள்ளங்கள் எத்தனை எத்தனை லட்சம்! தமது வாழ்வுக் காலத்தையே ஒரு சகாப்தமாக்கி முடித்துவிட்டுச் சென்ற அந்தப் பேரறிஞர் திருமுகத்தைக் கண்டதும் குவிந்த கரங்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணீரை அருவியாய்க் கொட்டிய கண்கள் எத்தனை எத்தனை லட்சம்! கண்ணுக்கு ஒளியாய்த் தமிழுக்குச் சுவையாய் மக்களுக்கு வாழ்வாய் அமைந்துவிட்ட அந்தத் தலைவரின் இறுதிப் பயணம் சென்ற வழியெல்லாம் மலர் தூவி மாலைகளை வீசிய கரங்கள் எத்தனை எத்தனை லட்சம்! அந்த அறிவுக் களஞ்சியத்தைத் தாங்கிய வண்டி தங்களை விட்டு முன்னோக்கி நகர்ந்தபோது இதயத்தையே, உயிர்மூச்சையே இழந்துவிட்டது போலக் கதறித் துடித்துத் தரையில் புரண்டு புரண்டு புழுவாய்த் துடித்தவர்கள் எத்தனை லட்சம் பேர்கள்!"

### மொழிபெயர்க்க.

1. *Education is what remains after one has forgotten what one has learned in School.* – ***Albert Einstein***
2. *Tomorrow is often the busiest day of the week.* – ***Spanish Proverb***
3. *It is during our darkest moments that we must focus to see the light.* – ***Aristotle***
4. *Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts.* – ***Winston Churchill.***

### உவமையைப் பயன்படுத்திச் சொற்றொடர் உருவாக்குக.

1. தாமரை இலை நீர்போல
2. மழைமுகம் காணாப் பயிர்போல
3. கண்ணினைக் காக்கும் இமை போல
4. சிலை மேல் எழுத்து போல

### பொருத்தமான நிறுத்தக் குறியிடுக.

சேரர்களின் பட்டப் பெயர்களில் கொல்லி வெற்பன் மலையமான் போன்றவை குறிப்பிடத்தக்கவை கொல்லி மலையை வென்றவன் கொல்லி வெற்பன் எனவும் பிற மலைப்பகுதிகளை வென்றவர்கள் மலையமான் எனவும் பெயர் சூட்டிக்கொண்டனர் இதற்குச் சங்க இலக்கியத்தில் சான்றுகள் உள்ளன.

### வாழ்த்துரை எழுதுக

உங்கள் பள்ளியில் நடைபெறும் நாட்டுநலப்பணித்திட்ட முகாமின் தொடக்க விழாவில் மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்க உரை ஒன்றை உருவாக்கித் தருக.

## குறுக்கெழுத்துப் போட்டி

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | | | | | | |
| | | | | | | | | 3 | |
| | | | | 4 | | | | | |
| | | | | | 5 | | | | |
| | | | | | 7 | | | | 6 |
| | 8 | | | | | 9 | | | |
| 10 | | | | | 11 | | | | 12 |
| | | 13 | | | | | | | |
| 14 | | | | | | 15 | | | |
| | | | | 16 | | | 17 | 18 | |

### இடமிருந்து வலம்

1. சிறுபொழுதின் வகைகளுள் ஒன்று (2)

2. நேர் நேர் – வாய்பாடு (2)

11. எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று (5)

14. மக்களே போல்வர் ___________ (4)

### மேலிருந்து கீழ்

1. முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது (5)

2. மொழிஞாயிறு (9)

3. நல்ல என்னும் அடைமொழி கொண்ட தொகைநூல்………(5)

4. கழை என்பதன் பொருள் (4)

7. மதியின் மறுபெயர், இது நிலவையும் குறிக்கும்(4)

10. குறிஞ்சித் திணைக்குரிய விலங்கு……..(4)

12………………என்பது புறத்திணைகளுள் ஒன்று(4)

### வலமிருந்து இடம்

15. மருந்தே ஆயினும் விருந்தோடு உண் – ஆசிரியர் (4)

16. மதிமுகம் உவமை எனில் முகமதி ………….(5)

### கீழிருந்து மேல்

5. விடையின் வகைகள் (3)

6. வீரமாமுனிவர் இயற்றிய நூல் (5)

8. பிள்ளைத்தமிழின் இரண்டாம் பருவம் (4)

9. முப்பால் பகுப்பு கொண்ட நூல்களுள் ஒன்று(6)

13. மன்னனது உண்மையான புகழை எடுத்துக் கூறுவது (7)

17. 96 வகைச் சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று (7)

18. செய்தவம் – இலக்கணக்குறிப்பு (5)



10th_Tamil_Unit 9.indd 226 12/08/2021 7:10:54 PM

**பாடலில் இடம்பெற்றுள்ள தமிழ்ப் புலவர்களின் பெயர்களைக் கண்டறிந்து எழுதுக.**

*கம்பனும் கண்டேத்தும் உமறுப் புலவரை எந்தக்*
*கொம்பனும் பணியும் அறம்பாடுஞ் ஜவாது ஆசுகவியை*
*காசிம்புலவரை, குணங்குடியாரை சேகனாப் புலவரை*
*செய்குதம்பிப் பாவலரைச் சீர்தமிழ் மறக்காதன்றோ*

**விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.**

**மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்**

சேர்க்கை எண்: நாள்: வகுப்பும் பிரிவும்:

1. மாணவ / மாணவியின் பெயர் :
2. பிறந்த நாள் :
3. தேசிய இனம் :
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் :
5. வீட்டு முகவரி :
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு :
7. பயின்ற மொழி :
8. பெற்ற மதிப்பெண்கள் :
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி :

| தேர்வின் பெயர் | பதிவு எண் – ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| | | தமிழ் | |
| | | ஆங்கிலம் | |
| | | கணிதம் | |
| | | அறிவியல் | |
| | | சமூக அறிவியல் | |
| | | மொத்தம் | |

10. மாற்றுச் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? :
11. தாய்மொழி :
12. சேர விரும்பும் பாடப் பிரிவும் பயிற்று மொழியும் :

மாணவ / மாணவியின் கையெழுத்து

### நன்றியுரை எழுதுக.

பள்ளி வளாகத்தில் நடைபெற்ற 'மரம் நடுவிழாவுக்கு' வந்திருந்த சிறப்பு விருந்தினருக்கும் பெற்றோருக்கும் பள்ளியின் 'பசுமைப் பாதுகாப்புப் படை' சார்பாக நன்றியுரை எழுதுக.

## மொழியோடு விளையாடு

### விளம்பரத்தை நாளிதழுக்கான செய்தியாக மாற்றியமைக்க.




### கீழ்க்காணும் நாள்காட்டியில் புதன் கிழமையை ஒன்றாம் தேதியாகக் கொண்டு தமிழெண்களால் நிரப்புக.

| ஞாயிறு | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி |
|---|---|---|---|---|---|---|
| | | | க | உ | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

### அகராதியில் காண்க.

குணதரன், செவ்வை, நகல், பூட்கை

## செயல் திட்டம்

விளையாட்டு உலகில் உங்களுக்குப் பிடித்த ஆளுமைத்திறன் மிக்க விளையாட்டு வீரர் பற்றிய செய்திகளைப் படத்துடன் தொகுப்பேடாக உருவாக்குக.

**காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

## நிற்க அதற்குத் தக...

ஒவ்வொரு சூழலிலும் ஒருவருக்கு ஒருவர் உதவி செய்தபடி இருக்கிறார்கள்; உதவி பெற்றபடியும் இருக்கிறார்கள்; சில உதவிகள் அவர்கள் மீதுள்ள அன்பினால் செய்கிறோம்; சில உதவிகள் இரக்கத்தால் செய்கிறோம். தொடர்வண்டியில் பாட்டுப் பாடிவரும் ஒருவருக்கு நம்மையறியாமல் பிச்சை போடுகிறோம். தொல்லை வேண்டாம் என்று கருதி, வேண்டாவெறுப்போடு சில இடங்களில் உதவி செய்கிறோம்!

நீங்கள் செய்த, பார்த்த உதவிகளால் எய்திய மனநிலை...

| உதவி | மனநிலை |
|---|---|
| வகுப்பறையில் எழுதுகோல் கொடுத்து உதவியபோது | இக்கட்டான சூழலில் செய்த உதவியால் எனக்கு மனநிறைவு; அவருக்கு மனமகிழ்ச்சி! |
| உறவினருக்கு என் அம்மா பணம் அளித்து உதவியபோது | கல்லூரிப் படிப்பைத் தொடர முடிந்ததால் உறவினருக்கு ஏற்பட்ட நன்றியுணர்வு! |
| | |

### கலைச்சொல் அறிவோம்

| | | | |
|---|---|---|---|
| *Humanism* – | மனிதநேயம் | *Cultural Boundaries* – | பண்பாட்டு எல்லை |
| *Cabinet* – | அமைச்சரவை | *Cultural values* – | பண்பாட்டு விழுமியங்கள் |

## அறிவை விரிவு செய்

யானை சவாரி – பாவண்ணன்

கல்மரம் – திலகவதி

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில் – ந. முருகேசபாண்டியன்



## இணையத்தில் காண்க.

*http://www.tamilvu.org/ta/courses-degree-p101-p1011-html-p1011661-23897* (ஜெயகாந்தன்)

*https://nagoori.wordpress.com/2010/02/04/*நாகூர்-ரூமியும்-நானும்/

*http://tamildigitallibrary.in/book-detail.php?id=jZY9lup2kZl6TuXGlZQdjZU3luMy#book1/*

(இலக்கியச் சிற்பிகள் – கு.அழகிரிசாமி)